மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, அந்த இடத்தை பள்ளிக்குக் கொடுக்கவேண்டும் என்றுதான் டி.ஆர்.ஓ. பரிந்துரை செய்திருக்கிறார். ஹைகோர்ட் ஸ்டே எடுக்கப்பட்டவுடன்தான் என்க்ரோச்மெண்டை அகற்ற அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

Licence for cotton transport

320 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu has increased the fee for renewal of annual general licence for Cotton transport from Rs. 200 to Rs. 300 a year; and

(*b*) if so, why?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ)-உம் (இ)-உம் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் இது குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. வினாயகம் : இந்த பருத்தி எற்றுமதி செய்வதற்கு 200 ரூபாயாக இருந்த பீசை 300 ஆக உயர்த்தியிருப்பதனால் அரசாங்கத்திற்கு வருகிற மொத்த லாபம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அனுப்பப்படுகிற பருத்தியின் தரத்தைப் பரிசோதித்தல், செலவுக்கணக்கைச் சரி பார்த்தல் போன்ற பல வேலைகளுக்குச் சர்க்கார் அதிகாரிகளைப் போடவேண்டியிருக்கிறது. ஆகவேதான் 200-இல் இருந்து 300-ஆக பீஸ் உயர்த்தப்பட்டதே தவிர தவிர வேறு இல்லை.

Cocoa plantations

* 321 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether a large number of acres are to be brought under Cocoa plantations in this State during 1970–71; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கொக்கோ பயிருக்குத் தேவையான மழை வளம், நிலவளம் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. அது அதிக வருவாய் உள்ள பயிர். ஆகவே ரப்பர் தோட்டம் போன்று கொக்கோ ப்ளாண்டேஷனுக்கும் திட்டம் வகுக்க அரசாங்கம் முன்வருமா?

---

* 457-458-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 செப்டம்பர் 9]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கரா பரப்பில் கொக்கோ பயிரிட கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் மூலமாக ஒரு திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது அவர்களது ஆய்வு முடிந்த பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கன்னியாகுமரி மாவட்டத்தில் கொக்கோ பயிரிடுகிறவர்களுக்கு வட்டி இல்லாக் கடனைக் கொடுத்து ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது 300 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் வரை கடனைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். வட்டி இல்லாமல் கொடுக்கிற திட்டம் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி: நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் கொக்கோ பயிர் வெற்றிகரமாக வருவதால் நெல்லை மாவட்டத்திலும் கொக்கோ ப்ளாண்டேஷனை ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நெல்லை மாவட்டத்தைப்பற்றிய குறிப்பு இல்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: தனியார் காடுகளில் சந்தன மரத்தோடு கொக்கோ மரத்தையும் பயிரிடுகிறார்கள். அது போலவே சர்க்கார் காடுகளிலும் பயிரிட முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆலோசிக்கலாம்.

தமிழ்நாட்டில் ராடார் சாதனம்

* 322 வினு—**திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புயல் வருவதை முன் கூட்டியே அறிவிக்கும் வகையில் ராடார் சாதனம் நிறுவ இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் உத்தேசித்துள்ளதா?

(இ) எந்தெந்த இடங்களில் நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம், தமிழ் நாட்டின் கிழக்கு கடற்கரையோரமாக இரு ராடார்களை நிறுவ இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் யோசித்துள்ளது.

(இ) 1971-ம் ஆண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு ராடாரும் 1972-ம் ஆண்டு நாகப்பட்டினத்தில் மற்றொரு ராடாரும் நிறுவப்படும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: புயல் வருவதை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய ராடார் சாதனத்தை, மீனவர் சமுதாயம் பெருவாரியாக வசிக்கும் கன்னியாகுமரியில் நிறுவ இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தப் பகுதிகளில் ஆறு ராடார்களை நிறுவவேண்டும் என்று தீர்மானித்து, அவைகளில் ஒன்றை ஆந்திரத்திலுள்ள விசாகப் பட்டினத்தில் நிறுவி இருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் நுங்கம்பாக்கத்தில்